செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

மொழித் தொழில்நுட்பத் துறை

# தொடரடைவி

## *பயனாளர் கையேடு*

© 2021 செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

https://www.cict.in/

# தொடரடைவி

## 1. தொரடடைவு

தொடரடைவு என்பது ஒரு நூலில் அல்லது பதிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் அகர வரிசைப்படுத்தப்பட்ட பட்டியலாகும். இப்பட்டியலில் சொற்களுடன் அவை இடம்பெறும் தொடர்களும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

### தொடரடைவின் பயன்கள்:

- ஒரே சொல்லின் வெவ்வேறு வகையான பயன்பாடுகளை அறிதல்
- தொடரடைவின் துணை கொண்டு வேர்சொற்களை இனம் காணுதல்
- ஒரு தொடரில் சொற்கள் கையாளப்படும் விதத்தை அடையாளம் காணுதல்
- வாக்கிய அமைப்புகளைக் கண்டறிதல் மற்றும் வகைப்படுத்துதல்
- ஒரு சொல் ஒரு நூலில் எத்தனை முறை பயின்று வரும் என்பதைத் தொடரடைவு மூலம் அறிதல்.
- ஒரு சொல் அதன் தொடரியல் சூழலுக்கேற்பச் சொற்பொருண்மை பெறுவதை உணர்தல்.
- வரலாற்று முறை இலக்கணம், வரலாற்று முறை அகராதி உருவாக்கத்திற்குப் பயன்படல்.
- சொற்களஞ்சியங்கள், பொருட்களஞ்சியங்கள், கலைக்களஞ்சியங்கள் தயாரிக்க உதவுதல்.
- இயற்கை மொழி ஆய்வில் பின்வரும் மென்பொருள் உருவாக்கத்திற்குத் துணைபுரிதல்:
    - உருபனியல் பகுப்பான்
    - உருபனியல் உருவாக்கி

- இயந்திர மொழிபெயர்ப்பு
- சொல்வகைக் குறிப்பான்
- தொடர்பகுப்பி
- மொழிக்கல்வி
- தரவக வழிக் கல்வி
- தரவக வழி அகராதி
- தரவக வழி மொழிபெயர்ப்பு
- இணைய வழித் தரவுத்தளம்
- தேடுபொறி உருவாக்கம்
- சொல்வளம் உருவாக்கம்
- சங்க இலக்கியங்களுக்கான தரவுதள உருவாக்கம்
- சொல் மற்றும் இலக்கண திருத்திகளின் பின்புலத் தரவு உருவாக்கம்
- உரை ஆய்விற்குத் தேவையான தரவு உருவாக்கம்

**தொடரடைவி**


தொடரடைவி என்பது கொடுக்கப்பட்ட ஏதேனும் ஒரு சொல்லின் தொடரடைவை ஒரு நூலில் இருந்து உருவாக்கித் தரக்கூடிய கணினி நிரல். இப்பணியைச் செய்துதரும் மென்பொருள் **தொடரடைவி** எனப்படுகின்றது. இம்மென்பொருளில் சொல், நிகழ் எண், விழுக்காடு, தொடரடைவு ஆகியன தரப்பெற்றுள்ளன.

தொடரடைவி பயனாளர்களுக்கு எளிதில் பயன்படும் வகையில் நான்கு **(menu bar)** கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை

- கோப்பு
- தொடரடைவி
- உதவி
- வெளியேறு

## கோப்பு

கோப்பைத் தெரிவு செய்க எனும் குமிழ் பனுவலை **(Text file)** உள்ளீடு செய்வதற்குப் பயன்படுகிறது. ஒருங்குறியில் **(UNICODE)** அமையப்பெற்ற நூலைப் பனுவல் **(*.txt)** வடிவில் உள்ளீடு செய்யலாம். சொற்சூழல் கருவியில் ஒன்றிக்கு மேற்பட்ட நூல்களை **(multi file support)** உள்ளீடு செய்து முடிவுகளைப் பெறும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது.




படம் **1:** தொடரடைவி பயனாளர் இடைமுகம்

- **தொடரடைவி**

தொடரடைவி என்பது மூன்று உட் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

- ❖ தொடரடைவி
- ❖ தொடரடைவைப்பெற
- ❖ கணக்கீடு

## ❖ தொடரடைவி

கோப்பு எனும் குமிழைப் பயன்படுத்தி நூலைத் தெரிவு செய்யப்பெற்ற உடன் தொடரடைவி என்னும் குமிழைச் சொடுக்கினால் பின்வரும் இரண்டு குமிழ்கள் தோன்றும்.


- ❖ தொடர்பின்
- ❖ தொடர்முன்

ஆய்வுப் பயன்பாட்டிற்கு ஏற்ப தொடர்முன், தொடர்பின் என்னும் இரு குமிழ்கள் அளிக்கப்பட்டுள்ளன.

## ❖ தொடர்பின்

'தொடர்பின்' என்ற குமிழியைத் தெரிவு செய்யும்போது சொல், நிகழ்வெண், விழுக்காடு, அந்தச் சொல் இடம்பெற்றுள்ள நூல், செய்யுள் எண், செய்யுள் அடி எண் ஆகியவற்றுடன் தொடரடைவும் பயனாளர் இடைமுகத்தில் தோன்றும்.


*சான்றாக : அரசன் **2 0.1311** திரிகடுகம்.**1:54** குடியோம்பல் வல்லான் அரசன் வடுவின்றி;**1:387** நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்*



படம் 2: முடிவுகள் - நூற்குறிப்புமுன்

## ❖ தொடர்முன்

'தொடர்முன்' என்ற குமிழியைத் தெரிவு செய்யும்போது சொல், நிகழ்வெண், விழுக்காடு, தொடரடைவு, நூல், செய்யுள் எண், செய்யுள் அடி எண் ஆகியவை பயனாளர் இடைமுகத்தில் தோன்றும்.





**படம் 3: முடிவுகள்- நூற்குறிப்புபின்**

அரசன் 2 0.1311 குடியோம்பல் வல்லான் அரசன் வடுவின்றி திரிகடுகம்.1:54, நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர் திரிகடுகம்.1:387

- ## விழுக்காடு

'விழுக்காடு' என்னும் பகுதியில் அகரவரிசை/னகரவரிசைப் படுத்தப்பட்ட அச்சொற்கள் எத்தனை விழுக்காடு என்பதனைப் பெற இயலும். விழுக்காடு பகுதியில் ஏற்கெனவே காணப்பெறும் சொற்களின் விழுக்காட்டினை ஏறு, இறங்குமுகமாக அடைவுபடுத்த இடைமுகத்தின் விழுக்காடு குமிழினை ஒரு முறை சொடுக்க இறங்குமுகமாகவும் மறுமுறை சொடுக்க ஏறுமுகமாகவும் மாறி அமையும்.





**படம் 4. முடிவுகள் - கணக்கீடு**

## ▪ கடவுள் வாழ்த்து

'கடவுள் வாழ்த்து' எனும் விருப்பதேர்வைத் தெரிவு செய்து தொடரடைவைச் சுழியத்தில் இருந்தும் அல்லது ஒன்றில் இருந்தும் தொடங்குமாறு பயனாளர் தம் விருப்பதிற்கேற்ப அமைத்துக் கொள்ளலாம். சங்க இலக்கியங்களைப் பதிப்பிக்கும் போது கடவுள் வாழ்த்தை உட்படுத்தி எண்ணிட்டும், கடவுள் வாழ்த்தினை விடுத்து எண்ணிட்டுப் பதிப்பிக்கும் மரபு காணப்பெறுகின்றது. ஆகவே இத்தொடரடைவுக் கருவியினைப் பயன்படுத்தும்போது இத்தகைய குழப்பம் வராமல் இருக்க மேற்குறிப்பிட்டவாறு இரு முறையில் எண்ணிட்டுத் தரப்பெற்றுள்ளது. இது இதன் தனிச் சிறப்பு.

## ▪ அகரவரிசை/னகரவரிசை

இடைமுகத்தில் உள்ள 'சொல்' என்னும் பகுதியினை ஒரு முறை சொடுக்கினால் அச்சொற்களை அகர வரிசைப்படுத்தவும், மறு முறை சொடுக்கினால் னகர வரிசைப்படுத்தவும் இயலும்.





**படம் 5. முடிவுகள் - அகரவரிசை**

- **முடிவைப்பெற**

தொடரடைவி கருவியில் இருந்து பெறப்பட்ட முடிவைப் பனுவலாகத் (Text file) தரவிறக்கம் செய்து கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ‘முடிவைப்பெற’ எனும் குமிழியைத் தெரிவுசெய்தால் ‘கோப்பைத் தெரிவு செய்யவும்’ எனும் தலைப்பிட்ட சன்னல் திரை தோன்றும். இதில் கோப்பின் பெயரைத் தட்டச்சுச் செய்து சேமி (save) எனும் குமிழினைத் தெரிவு செய்தால் தொடரடைவி கருவியின் மூலம் பெறப்பட்ட முடிவைப் பனுவலாகப் (Text file) பெறலாம். இதில் சொல், சொல்நிகழ்வெண், தொடரடைவு ஆகிய மூன்று பகுதிகளைப் பெற இயலும்.

கூடுதலாக, இக்கருவியில் சில ஆய்வுகளுக்கு ‘விழுக்காடு’ எனும் முடிவு தேவைப்படும் நிலையில் ‘விழுக்காடு’ விருப்பத்தேர்வு அளிக்கப்பெற்றுள்ளது. அதனைத் தெரிவு செய்து பயனாளர் நூலில் இடம்பெற்றுள்ள சொல், அச்சொல்லின் விழுக்காடு, சொல்நிகழ்வெண், தொடரடைவு ஆகிய நான்கு பகுதிகளைப் பனுவலாகப் **(Text file)** பெறலாம்.





**படம் 6. முடிவுகள்**

இதன் முடிவுகளைப் பனுவலாகப் பெறும்போது **(Text file)** நூலின் மொத்த பாடல் எண்ணிக்கையும், மொத்த சொற்களின் எண்ணிக்கையும், ஒருமுறை மட்டுமே இடம்பெற்றுள்ள சொற்களின் எண்ணிக்கையும் பெற

இயலும். தொடரடைவி கருவி தரவினை உருவாக்க எடுத்துக் கொண்ட கால அளவு, அதன் பயனை அளிக்க எடுத்துக்கொண்ட கால அளவு, இவ்விரண்டும் செயல்படும் இடைப்பட்ட கால அளவு ஆகிய தகவல்களையும் தருவதாக இக்கருவி அமைகின்றது.

## ❖ தேடு


தொடரடைவியில் பெறப்பட்ட முடிவில் இருந்து ஒரு குறிப்பிட்ட சொல்லை மட்டும் தேடி அதன் முடிவைப்பெறும் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் தேடு எனும் குமிழைத் தெரிவு செய்தால் ஒரு திரை தோன்றும். இந்தத் திரையில் சொல், தேடு எனும் இரண்டு குமிழ்கள் இடம் பெற்றுள்ளன. சொல் என்னும் குமிழின் அருகில் கொடுக்கபெற்றிருக்கும் உரைப்பெட்டியில் தேடும் சொல்லினை உள்ளீடு செய்தால், அச்சொல், பயின்று வரும் நிகழ்வெண்கள், விழுக்காடு, சொல்வருகை ஆகியன பெறப்படும். இந்தத் திரையிலும் தேடுதலின் நிறைவாகப் பெறும் முடிவினையும் தரவிறக்கம் செய்ய இயலும். ‘வெளியேறு’ என்னும் குமிழினைத் தெரிவு செய்தால் ‘தேடு’ என்னும் பகுதியில் இருந்து மட்டும் வெளியேறலாம்.




**படம் 7. முடிவுகள் - கணக்கீடு**

## ❖ கணக்கீடு

தொடரடைவியைப் பயன்படுத்தித் தொடரடைவைப் பெற்ற பின் **'**கணக்கீடு**'** எனும் குமிழியைத் தெரிவு செய்தால் உள்ளீடு செய்யப்பட்ட நூலின் மொத்த பாடல் எண்ணிக்கையும், மொத்த சொற்களின் எண்ணிக்கையும், ஒருமுறை மட்டுமே இடம்பெற்றுள்ள சொற்களின் எண்ணிக்கையும் பெறலாம்.




**படம் 8. கணக்கீடு**

## II. தொடர்புக்கு

தொடர்புக்கு எனும் குமிழினைச் சொடுக்கினால் உருவாக்கம் எனும் குமிழ் தோன்றும். இதனைத் தெரிவு செய்தால் இந்தக்கருவியை உருவாக்கிய குழு மற்றும் நிறுவனத் தொடர்பு முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி எண் ஆகியவற்றினைப் பெறலாம். இந்த மின்னஞ்சல் முகவரியில் பயனாளர்கள் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்யலாம்.




**படம் 9. தொடர்புக்கு**

## III. வெளியேறு

வெளியேறு எனும் பட்டியலில் நீக்கு, வெளியேறு என இரண்டு குமிழிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதில் 'நீக்கு' எனும் குமிழியைத் தெரிவு செய்வதன் மூலம் தொடரடைவியின் அனைத்து முடிவுகளையும் நீக்க இயலும். தொடரடைவியில் இருந்து வெளியேற 'வெளியேறு' எனும் குமிழியைத் தெரிவு செய்வதன் மூலம் வெளியேறலாம்.

## தொடரடைவி

**பதிப்பு** 1.0

**காப்புரிமை** செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

**உருவாக்கம்** மொழித் தொழில்நுட்பப் புலம்


**தொடர்புக்கு** செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
செம்மொழிச் சாலை
பெரும்பாக்கம்
சென்னை – 600 100.
தொலைபேசி : +91 - 44 22540125

மின்னஞ்சல் : dlt@cict.in

இணையம் : https://www.cict.in/

https://twitter.com/CICTOfficial

https://www.instagram.com/cict_chennai/

https://www.facebook.com/chennaicict/

https://www.youtube.com/user/cictarchives